முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 07 திகதி முதல்
சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 14 திகதி வரை
(24.09.2023 ஞாயிறு முதல் 01.10.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. மதமல்ல இந்துத்வம் சகாப்தம்
மரபல்ல மனுகுல வழிகாட்டி
ஆதரித்து இதன் உண்மைதனை
ஆராய்ந்து வழிநடந்தால் போதும்
2. போதுமப்பா மனிதன் புனிதனாக
பேருலகை வழிநடத்தும் நல்தலைவனாக
பூதலம் மெச்சவே உயர நேரும் என
பாரதம் தமிழக பண்பு நலம் கூறியே
3. கூறியே இந்தியா தமிழகத்தின்
குறிப்பாக சோபகிருது தரிவைதிங்கள்
தெரியவே சப்தம திகதிமேல் முன்னான்கீர் திகதி வரை
தேசமதில் நடக்கும் வார நிகழ்வாக
4. ஆகவே வருங்கால பலன்குறித்த ஆசி
அரங்கன் கேட்க அகத்திய மகரிஷியும் உரைப்பேன்
வகைபட மக்களை நோக்கி காக்கும்
வரையறுத்து வளர்க்கும் கொள்கை அத்தனையும்
5. அத்தனையும் மனுதர்மம் தானப்பா
அதனில் மூடபழக்க வழக்கங்கள் அகற்றி
சத்திய வழிதன்னை ஏற்றால் போதும்
சகலருக்கும் நன்மைதரும் மார்க்கம் ஆகி

6. ஆகியே இந்தியா தமிழகம் தானும்
அனைத்திலும் தேற்றம் காணும்
அகிலம் வியக்க தன்னிலை மாறும்
ஆபத்தாக மதகலகம் பார்க்கும் எண்ணம்

7. எண்ணம் கொண்ட வாதங்கள்
எவர் கைக்கொண்டு நின்றாலும்
மண்ணுலகில் அவபேரு கலங்கம்
மக்களிடை புறக்கணிப்பு கண்டு

8. கண்டுமே பின்னடைவு காண நேரும்
கருணைபட சகிப்புத்தன்மை பட
தொண்டு மிக்க ஆளுமை கொள்ளவே
தேச வளர்ச்சிக்கு வழிகாட்டலாகும்

9. ஆகவே மக்களை நோக்கி
ஆபத்தான அரசியல்களம் காணா
பகைமையின்றி எம்மதமும் போற்றி
பண்போடு சகோதரத்துவம்பட இயக்கும்

10. இயக்கும் ஆளுமையே சிறந்து
இந்தியா தமிழகம் நடுநிலை கண்டிட
வியக்கும் வண்ணம் உலகளவில் சிறந்து
விரைந்து வளர்ந்த நாடாக மாற்றம் காணும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 07 ம் நாள் 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 14 ம் நாள் 01.10.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்திற்கான ஆசி நூல் :

இந்துத்துவம் என்பது மதம் அல்ல தத்துவமாகும் அது பெரும் சகாப்தமாகும் மனுகுலம் என்பது மரபு வழி வருவதல்ல அது மனிதனுக்கு ஒரு வழிகாட்டியாகும். அதன் உண்மைப் பொருளை ஆராய்ந்து தெளிந்து வழி நடந்திட்டால் போதுமப்பா மனிதன் புனிதனாக மாறிடுவான். நல்ல மனிதனாகி

இந்த உலகையே வழி நடத்தும் நல் தலைவனாக மாறி இந்த பூவுலகம் மெச்சுமாறு நிலை உயர்ந்திடும் வாய்ப்பும் கிட்டுமப்பா மனிதனை புனிதனாக்கும் வல்லமை மிக்க பாரத தமிழகத்திலே சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் **07** ம் நாள் **24.09.2023** ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் **14** ம் நாள் **01.10.2023** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அரங்க மகான் கேட்க அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

நாட்டு மக்களை காப்பாற்றி அவர்களது நற்பண்புகளை வரையறுத்து வளர்க்கும் கொள்கைகள் எதுவாயினும் அதுதான் மனிதாபிமான கொள்கைகள் எதுவெல்லாம் இருக்கிறதோ அதுவே மனுதர்மமப்பா. ஆகவே மக்களை தவறான வழிக்கு இட்டு செல்லும் மூடப்பழக்க வழக்கங்களில் இருந்து அகற்றி உண்மை ஞானமாம் சத்திய நெறி வழியினை ஏற்று கொண்டால் போதுமப்பா அந்த கொள்கையே சகலருக்கும் நன்மை தரும் மார்க்கமாக ஆகி இந்தியா தமிழகம் எல்லா வழிகளிலும் முன்னேறுமப்பா இந்த உலகமே வியக்குமாறு தனது நிலை மாற்றம் அடைந்து உயர் நிலைக்கு நாடு வந்திடுமப்பா.

அதை விடுத்து மனிதருக்கு துன்பம் ஏற்படும் வகையிலே மதமாக பார்த்து மத கலகம் உண்டாக்கும் விதமாக மதச்சாயம் பூசி வாதங்கள் செய்து குழப்பங்களை உண்டாக்கினால் அவர்களுக்கு அவப்பேரும் கலங்கமும் உண்டாகுமப்பா. மக்கள் புறக்கணிப்பையும் அவர்கள் சந்திக்க நேருமப்பா.

சகிப்பு தன்மையுடன், தொண்டுள்ளத்தோடு ஆட்சி நடந்தால் அது தேச வளர்ச்சிக்கு வழி காட்டலாக அவர்களது ஆட்சி அமைந்திடும். ஆகவே மதங்களால் மக்களிடை பிரிவு உண்டாகாமல் பார்த்து கொண்டு மதப்பிரச்சனைகளால் ஆபத்தை உருவாக்காமல் அரசியல் செய்து எம்மதமும் சம்மதம் எனும் கொள்கையுடன் நடந்து எல்லா மக்களையும் சகோதரர்களாக பாவித்து நடந்தால் அவர்களது ஆட்சி முறை சிறந்து விளங்கி நடுநிலை நாடாக ஆகி உலகளவில் பாரத தமிழகம் உலகினில் உயர்ந்து நிற்குமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–